மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

விடுதி

***67283—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டருக்கு மேல் அங்கே இருக்கின்ற மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கல்வியிலே மிகவும் பின்தங்கியிருக்கின்ற அந்தப் பகுதியிலே கண்டிப்பாக மிகவும்

2010 ஏப்ரல் 8]

பிற்படுத்தப்பட்டோர் விடுதி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலூர்பேட்டையிலே அரசு மேல்நிலைப் பள்ளி இருப்பதாக எனக்கு அரசின் குறிப்பு இருக்கிறது. அங்கே தேவை என்றும் அந்தக் குறிப்பிலே இருக்கிறது. எதிர்காலத்திலே நிதிநிலைக்கு ஏற்றாற்போல் அரசு கனிவோடு பரிசீலித்து தகுந்த முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று கண்டாச்சிபுரம் பகுதியிலே ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கின்றன. அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதி இல்லை. எனவே, அங்கே பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருப்பதால் அதைச் சுற்றியுள்ள மாணவிகள் எல்லாம் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அங்கே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பெண்கள் விடுதியைக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களிடமும் தங்கள் பகுதிக்கு இதுபோல வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. நிதிநிலைக்கு ஏற்றாற்போல் அந்தந்தப் பகுதியின் தேவையை அறிந்து முன்னுரிமை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.